ஸ்ரீ:

ஸ்ரீமதெ ஸௌம்ய ஜாமாத்ரு முநயெ நம: |

ஸ்ரீமந்
மணவாள மாமுநிகள்

20 MAR 1933
MADRAS

முதற்பதிப்பு

1315

ஸ்ரீவைஷ்ணவ
ஸித்தாந்தப் பிரசார கார்யாலயம்,
மைலாப்பூர், சென்னை.

காபிரைட்] ஆங்கிரஸ அற்பிசி மீ [விலை 0 1 6

PRINTED AT
THE DHARMIC PRINTING WORKS,
GEORGE TOWN, MADRAS.

223183

2 1933
2.23183

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸௌம்ய ஜாமாத்ரு முநயே நம:

ஸ்ரீமந் மணவாள மாமுனிகள்

ஸர்வ லோக நாயகனான பகவான் ஆனந்த ஸ்வரூபி. தர்ம மயமானவர். எங்கும் நிறைந்திருப்பவர். ஸ்வதந்த்ரர். அனந்த கல்யாண குணங்களை உடையவர். கவலை யென்பதே இல்லாதவர். ஜீவராசிகளான நாம் தான் கர்ம வலையில் சிக்கிக் கொண்டு பரிதபிப்பவர்கள். ஸ்வேச்சையாக எதையும் செய்து முடித்துக் கொள்ள சக்தி யில்லாத வர்கள். அப் பரம புருஷனுடைய கருணை யினாலேயே நாம் ஸம்ஸார மாகிற பெரும் சுழலி லிருந்து கரையேற வேண்டியவர்கள். என்று இவ்வாறு நம் சாஸ்திரங்களைப் பரம்பரை முறையில் ஆசார்ய முகமாகக்கற்றுணர்ந்த பெரியோர்கள் கூறுகின்றனர். ஆனால் ஸம்ஸாரக் கவலைக் கடலி லிருந்து நம்மைக் கரையேற்ற கருணையால் அவர் பட்டு வரும் சிரமத்தை நினைத்தால் ஜீவாத்மாக்க ளாகிற நம்முடைய நிலைமையே பல்வழியில் சிறந்ததென நினைக்கவேண்டி வருகிறது.

அவருடைய ஸ்வரூபம் அதிஸூக்ஷ்ம மானது. யோக நிஷ்டர்களின் மனதுக்குக் கூட சுலபமாக எட்டாதது என்று வேதங்களே அழுத்தமாய்ச் சொல்லுகின்றன. அப்படிப்பட்ட அதீந்த்ரியமான, அவ்யக்த—பிரகாசமாக இல்லாத—ஸ்வரூபத்தை உடைய ஸர்வேசுவரன் நம் மீது கருணைகொண்டு ரூபத்துடன் ஸ்ரீவைகுண்டத்திலும் க்ஷீராப்தியிலும் சங்கு, சக்ர, கதாதரராய் அவதரித்தார். அவதாரம் என்றால் இறங்கி வருவது என்று அர்த்தம். அப்படி இறங்கி வந்தும் போதா

தென்று நினைத்து ஸ்ரீராம க்ருஷ்ணாதி அவதாரங்கள் மூலம் சாதாரண மனித ரூபத்துடன் நம்மிடம் கலந்து பழகினர். இப்படிச் சில காலம் வந்து மறைவது போதாதென்று அர்ச்சா ரூபியாக விக்ரஹங்களில் ஸாந்நித்யம் கொண்டு ஆலயங்களில் சாசுவதமாக எழுந்தருளினர். ஸாளக்ராம சிலையில் ஆவிர்ப்பவித்து பிரதி வீடுகளிலும் அவருடைய நினைவு இருக்கும்படி செய்யக் கருணை கொண்டார். இவ்வெல்லாவற்றிலும் திருந்தாமல் பல ரிருப்பதைக்கண்டு தம் பிரிய தாஸர்களான நித்ய ஸூரிகளை பூமியில் ஆழ்வார்களாக அவதரிக்கச் செய்து தர்ம கர்மானுஷ்டான வழியை விளக்கினர். நன் முறையில் நடக்க வழி காண்பிப்ப தோடு உபதேசமும் செய்தால் தான் பிரயோஜனப் படும் என்று நினைத்து அநேக மஹாபுருஷர்களை அவதரிக்கச்செய்தும் தாமே நேராக வந்தும் ஆசார்ய கோஷ்டியை வளரச் செய்தார். இவைகளையெல்லாம் நிதானமாய் ஆராயும் பொழுது தாஸபூதர்களான நம்மை நல் வழி திருப்ப அந்த ஸர்வ லோக சரண்யன் பட்டு வரும் கவலை அளவி லகப்படாத தென்றே முடிவு செய்ய வேண்டி யிருக்கிறது.

ஆதி காலம் முதல் இவ் வாசார்ய கோஷ்டியை அணி வகுத்து அனுப்பி யிருக்கும் விதம் மிகவும் அதிசயிக்கத் தக்கதாயிருக்கிறது. அப் பரம புருஷனுடைய உயர்ந்த திட்டத்தின் ரஹஸ்யத்தை உணர்ந்தவர்களே நம் வைதிக மதத்தின் கருத்தைத் தெரிந்து கொண்டவர்க ளாவார்கள். உயர்ந்த மனோ நிலைமையை அடையாத மாணவர்களுக்கு ஒரே சமயத்தில் எல்லாவற்றையும் சொல்லித் திருத்தி விட முடியாது. ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வோர் விஷயத்தைத் தூக்கிச் சொல்லித்தான் பல விஷயங்களை அப்படிப்பட்ட ஸாமான்யர்களின் மனதில் பதிய வைக்க வேண்டியதாயிருக்கிறது. கணக்கற்ற

ஜீவராசிகளடங்கிய இப் பெரும் உலகப் பள்ளிக்கூடத்தை நடத்தி வரும் பகவான் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு பல ஆசார்யர்களைக் கொண்டு ஒரே நோக்கத்தின் பல அம்சங்களை தனித் தனியாய் வற்புறுத்தி யிருக்கிறதாகத் தோன்றுகிறது. இந்த வுண்மையை நிதானித்துக் கொள்ளப் பொருமையில்லாத பலர் ஒவ்வோர் ஆசார்யரையும் பரஸ்பர விரோதமுள்ள பல கொள்கைகளையுடைய வெவ்வேறு கக்ஷிகளின் தலைவர்களென ப்ரமித்துத் தற்கொலைக் கொப்பான பரஸ்பரத் துவேஷத்தைப் பெருக்கி விடுகிருர்கள். இதனுல் அவர்களும் கெட்டு உலகின் அமைதியும் குலைந்து விடுகிறது. பொதுவான ஒரே நோக்கத்தையுடைய வைதிக மதத்தின் பலம் குறைவதோடு பரிஹாஸத்திற்கும் அது உள்ளாகி விடுகிறது.

இதன் ஸம்பந்தமான உண்மையைச் சற்று இங்கே விவரித்துக் கூறுவது பொறுத்த மானதே. முதலில் ஒரு சமயம் ஜைமினி மதம் மிகுந்த பிரசாரத்தை அடைந் திருந்தது. கர்மாக்களே பலனைக் கொடுக்கின்றன. கர்மாக்களைச் செய்விப்பவரும் அவைகளினுல் திருப்தி யடைகிற வருமான ஈசுவரன் என்ற எவரு மில்லை யென்ற முறையில் அக் கக்ஷியின் பிரசாரம் வலுத்திருந்தது. யாகாதி கர்ம காண்டங்களுக்கு மேல் கவனிக்கப்பட வேண்டிய பாகங்கள் வேதங்களில் இல்லை போல் உலகம் நினைக்கும்படி இக் கர்ம வாதிகளின் பிரசாரம் பரவி நின்றது. அவ் வெண்ணத்தை அடியோடு கலக்கியே தெளிய வைக்க வேண்டு மென பகவான் புத்தாவதாரத்தைத் தோற்றுவித்தார். பௌத்த மதம் யாகாதிகளைச் சிறிது தடைப் படுத்துவ தோடு வேதங்களின் பிரமாணத்தையும் வேறுடனே களைந் தெரிய முனைந்தது. அந்த ஸமயம் குமரில பட்டர் மூலம் வைதிக கர்ம நிந்தையைக் குறைத்து வேதப் பிராமாண்யத்தையும் ஸ்தாபிக்க வேண்டிய தாயிற்று.

வேத கௌரவத்தை நிலை நிறுத்த அதிக ஊக்கம் கொண்ட குமரிலருக்கு ஈசுவரன் ஒருவ ரிருக்கிறார் என்ற எண்ணத்தையும் ஸ்தாபிக்க அவகாசம் ஏற்பட வில்லை. இந்த விஷயத்தைச் சிதையி லிருக்கும் பொழுது தாமே ஒப்புக் கொண்டிருக்கிறார். தாம் அதற்காகவே அக்னிப் பிரவேசம் மூலம் பிராயஸ்சித்தம் செய்து கொண்டதாகவும் சொல்லியிருக்கிறார். அச் சமயத்தில் பகவானுக்கு தராசின் மற்றோர் தட்டை அழுத்தவேண்டிய தாயிற்று. கர்ம காண்டங்களுக்கு மேல் ஞான காண்ட மாகிற உபநிஷத் பாக மிருக்கிறது. அதினாலேயே வேதங்களின் முடிவான கொள்கைகள் நிரூபிக்கப் படுகின்றன. இக்கர்மாக்களினால் திருப்தி யடையக்கூடிய பகவான் என்ற ஒருவர் இருக்கிறார். அவரை அடையும் பொருட்டு இவைகளெல்லாம் உபாயங்கள் என்று இவ்வண்ணம் ஸ்ரீசங்கரரின் அவதார மூலம் வற்புறுத்தப் பட்டது. பிறகு கால மாறுதலாலும், அவருடைய உட்கருத்து ஸரிவர உணரப்படாமல் விபரீதப் பிரசாரங்கள் மேலோங்கியதினாலும் ஸர்வேசுவர ஸ்வரூபம் தவறாக நினைக்கப் பட்டு தாங்களே ஈசுவரன் என்ற எண்ணத்துடன் பலர் வளர தலைப்பட்டனர். அச்சமயம் ஜீவர்கள் பாரதந்த்ரர்கள்; ஸர்வேசுவரன் அவர்களுடைய நாயகன்; பக்தி, பிரபத்தி வழிகளினால் அவர் கருணையைப் பெற்றாலே ஸம்ஸாரக் கவலை நீங்கி கர்ம வலையி லிருந்து சேதனர்களான நாம் விடுபடமுடியும்; என்ற வைதிக மதத்தின் பரம ரஹஸ்யத்தை நாதமுனிகள், ஆளவந்தார், உடையவர் முதலிய அவதார பரம்பரை மூலம் மீண்டும் உறுதிப் படுத்த வேண்டியதாயிற்று. காலத்தின் விரிவால் எவ்வித உயர்ந்த அபிப்ராயங்களும் தளர்ச்சியை யடைந்து விடுகின்றன வல்லவா? ஒரு சமயம் பிரசாரத்தை யடைந்த அதே கருத்தை மறுபடி புதிய இணைப்புடன் மாறுபட்ட காலத்திற்குத் தகுந்தபடி எடுத்

துரைக்க வேண்டியது அவசியமாக ஏற்படுகிறது. ஆகை யால் ஆழ்வார், நாத்முனிகளின் குரு பரம்பரை விளக்கிய அரிய தத்வார்த்தங்களைப் புதிய வாதங்களி லிருந்து பாது காக்க வேண்டியும், மறுமுறை எப்படிப்பட்ட சக்திகள் எழும் பியபோதிலும் அசைக்க முடிமாமலும், சிறந்த நுண்ணறிவு நிரம்பிய க்ரந்தங்களையும் வ்யாக்யானங்களையும் பட்டர் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் போன்றவர்கள் மூலமாய் இயற்றச் செய்து மூலக்ரந்தங்களுக்கு அழிவிலா வேலி போட வேண் டியது அத்யாவசியமாயிற்று.

பட்டர், தேசிகன் போன்ற மஹான்களுக்கு ஸாமான்னி யர்களிடம் பிரசாரம் செய்ய போதிய அதிக அவகாசம் கிடை யாது. பூர்வாசார்யர்களின் நூல்களைக் காப்பாற்ற வேண்டிய கார்யங்களிலேயே அவர்கள் அதிகம் உழைக்க வேண்டியதா கவிருந்தது. ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள வேதங்கள், வேதா ந்த க்ரந்தங்கள், ஸ்ரீபாஷ்யாதி வ்யாக்யான கோசங்கள், தமிழ் வேத மெனப்படும் ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகள், அவைகளின் வ்யாக்யானங்கள், எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்தறிந்து பிரசாரமும் செய்து வந்தார்கள். பிறகு கால த்தின் விபரீத மாறுதலால் ஸம்ஸ்க்ருத பாஷாப்யாஸம் குறை ய ஆரம்பித்தது. பேசப்படும் பாஷையாகிற தமிழிலுள்ள திவ்யப் பிரபந்தங்களின் மூலமாகத் தான் ஸாமான்யர்கள் உள்பட எல்லோரிடத்திலும் பகவத் பக்தியை வளர்க்கமுடியும் என்று நினைக்கும்படியான ஸமயமாக மாறி வந்தது. மற்றும் தென்னிந்தியாவில் பலர் தேச பாஷையின் வலுவைக் கொண்டே பாமரர்களின் மனதைக் கலக்கி சமய மாற் றல் செய்து கொண்டு ஆலயங்களின் கொள்கைகளையும் மூர்த் திகளையும் மாற்ற முயன்றனர். அவர்களின் தவறை வளர

வொட்டாது செய்யவெண்டியது அவசியமாக விருந்தது. அச்சமயம் ஸ்ரீமந் மணவாள மாமுனிகள் அவதரித்துச் சில உறுதியான கொள்கைகளை நம்மவர்களிடம் ஊன்ற வைக்க வேண்டியதா யிற்று. தமிழ் வேத மெனப்படும் ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தத்தை விசேஷித்துப் பிரசாரம் செய்து ஸ்ரீவைஷ்ணவ ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டு மென்பதே அவருடைய தீவ்ரமான நோக்கம். இவ்வெல்லா விஷயங்களையும் நன்கு ஆராய்பவர்களுக்கு ஆசார்ய அவதா ரங்களின் உட்கருத்து தெளிவாய் விளங்கும். ஒரே நோக் கத்தை உடைய பொது மதத்தின் உட்பிரிவினர்களான நமக் குள் பரஸ்பர துவேஷமும் அவநம்பிக்கையும் ஒருபொழுதும் இடம் பெறாது. பல ஸமயங்களில் அவதரித்த ஆசார்யர்கள் தனித் தனிக் கக்ஷியை ஸ்தாபிக்க வர வில்லை யென்றும் எல் லோருடைய நோக்கமும் ஒன்றே தான் என்றும் நன்கு விளங் கும்.

அம் மஹான் ஸ்ரீமந் மணவாள மாமுனிகளின் சரித் திரத்தையே இப்புஸ்தகத்தில் சுருக்கமாக வரையப் போகி றோம். இவ்வவதார புருஷன் சற்றேறக் குறைய 560 வரு ஷங்களுக்கு முன் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஆழ்வார் திருநகரியில் அவதரித்தார். அப் புண்ணிய நகருக்குச் சமீபத் திலுள்ள சிக்கில் கிடாரம் என்ற சிறிய கிராமத்தில் பிறந்த தாகவும் வேறு சில அபிப்ராயங்களு மிருக்கின்றன. சிக்கில் கிடாரம் அவர் தாயின் ஜன்ம பூமி. ஆகையால், அங்கு மவர் பிறந்திருக்கலா மென நினைக்கவும் இட மிருக்கிறது. அவ ருடைய ஜன்ம பூமி இவ்விரண்டுகளுக்குள் எதுவாயிருந்தா லும் அவருடைய இளமைப்பருவம், வித்யாப்யாஸம், எல்லாம் சிக்கில் கிடாரத்தில் தான் என்ற விஷயத்தில் எல்லா அபிப்ரா யங்களும் ஒற்றுமையுட னிருக்கின்றன.

இவர் ஸ்ரீவைஷ்ணவ ப்பிராம்மண குலத்தில் தாதர் அண்ணர் என்ற புண்ணிய புருஷருக்கும் ஸ்ரீரங்க நாச்சியார் என்ற அழகிய திருநாமம் பூண்ட அவருடைய தர்ம பத்னிக்கும் அருமைப் புதல்வராக அவதரித்தார். ஸ்ரீரங்க நாதனிடம் இடைவிடா மனதைச் செலுத்தி வந்த அண்ணர் தம் குமாரருக்கு பத்தாவது நாளிலேயே ஸமாச்ரயணத்தையும் செய்வித்துப் பிறகு அழகிய மணவாளன் என்ற அப்பெருமாளின் திருநாமத்தையே சாற்றினர். ஆகையால் அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் என்று இவர் பெயர் வழங்கலாயிற்று. பெரிய ஜீயர், மணவாள மாமுனிகள், யதீந்த்ரப் பிரவணர், வர வர முனி, ரம்ய ஜாமாத்ரு முநீந்த்ரர், ஸௌம்ய ஜாமாத்ரு யோகீந்த்ரர், என்ற பல காரணப் பெயர்களாலும் இவர் பிறகு குறிப்பிடப் படுவதுண்டு. இவ்வழகிய மணவாள மாமுனிகள் ஆதிசேஷனுடைய அவதார மென்றும், உடையவரே திரும்ப அவதரித்தாயும் கொள்ளப்படுகிறது.

விதிப்படி காலத்தில் வைதிக ஸம்ஸ்காரங்க ளெல்லாம் ருக்கு நடைபெற்றன. உபநயநமும் முறைப்படி முடிவடைந்தது. வேதாத்யயனங்கள் ஆன பின்பு விவாஹமும் ஆயிற்று. தாத ரண்ணர் தாமே குமாரருக்கு அருளிச் செயல்களையும் ரஹஸ்யங்களையும் உபதேசித்தார். மிகவும் புத்திக் கூர்மையுள்ள மணவாளர் சாஸ்த்ரங்கள், ஸம்ப்ரதாயங்கள் எல்லாவற்றையும் எளிதி லுணர்ந்து அவைகளில் ஆழ்ந்த சிரத்தை கொண்டார். அவைகளி லடங்கிய நியமங்களைத் தவறாது அனுஷ்டித்தும் வந்தார். எல்லா க்ரந்தங்களிலும் அவருக்கு பூர்ண விசுவாஸமும் மதிப்பும் இருந்து வந்த போதிலும் ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளில் தான் அவர் மனம் பெரிதும் ஈடுபட்டிருந்தது. சில நாட்கள் சென்ற பின் அவர் பிதாவின் காலம் முடிந்து விட்டது. இது வரை மாதுல (தாயின்

ஸஹோதரர்) க்ருஹத்தில் சிக்கில் கிடாரத்தில் இருந்து வந்தார். தகப்பனுர் இறந்தவுடன் அவருடைய உத்தர க்ரியைகளைச் செய்து விட்டுத் திருநகரிக்கு எழுந்தருளி விட்டார்.

அந்த சமயத்தில் அங்கு திருவாய் மொழிப் பிள்ளை என்கிற பிரவசித்த ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர் எழுந்தருளியிருந்தார். அவர் தமிழ்ப் பிரபந்த ஸேவையையே உயிர் நிலையாகக்கொண்டவர். தமக்குப் பின் அக்கைங்கர்யத்தை அன்புடன் ஏற்றுத் திறமையுடன் செய்யத் தகுந்தவர் எவரும் கிட்டவில்லையே எனக் கடும் இயக்கத்துட னிருந்து வத்தார். இத்தருணம் மணவாள மாமுனிகள் சென்று அவரை ஆச்ரயித்தார். இவருடைய தேஜஸ்ஸையும் புத்திசாலித் தனத்தையும் கண்டு [illegible] குறை நீங்கவே பகவான் இப் புதிய சிஷ்யரை அனுப்[illegible]ருப்பதாக நினைத்து உள்ளம் மகிழ்ந்தார். மணவாள மாமுனிகளிடம் விசேஷ அன்பு வைத்து எல்லா ரஹஸ்யார்த்தங்களையு[illegible]க்துக்கு [illegible]போதித்தார். குல குருவாயுள்ள ஸ்ரீ ராமானுஜருடைய [illegible]ந்தங்களை சிரத்தையுடன் கைப்பற்றி நல்வழி சேர வேண்டிய வழிகளையும் காண்பித்துத் தாம் ஆராதித்த உடையவருடைய விக்ரஹத்தையும் அவரிடம் கொடுத்தார். தவருமல் அவரை ஆராதித்து வரும்படி ஆஜ்ஞாபித்தார். மணவாளரும் அந் நியமனத்தை சிரஸால் வகித்து அவ்வண்ணமே செய்து வருவதாகத் தெரிவித்துக் கொண்டார். உடையவரிடம் தமக்கிருக்கும் அன்பு பெருக 'யதிராஜ விம்சதி' என்ற உடையவர் ஸ்தோத்ரத்தை செய்தார். தம்மைப் பின் பற்றியவர்களும் அதை யனுஸரித்து உடையவர் க்ருபையைப் பெற வழி காட்டியது போல் அது விளங்கியது. இவ்வாறு உடையவரிடம் அவருக் கிருந்த பக்த்யதிசயத்தாலேயே 'யதீந்த்ரப்பிரவணர்' என்ற பெயர் பொருத்தமாக ஏற்பட்டது. யதீந்த்ரப்பிரவணர் என்ருல் யதி (ஸந்யாஸி)

சிரேஷ்டரான உடையவரிடத்தில் மிகவும் பக்தியுடன் ஆழ்ந்தவர் என்று கருத்து. இப்படிப்பட்ட மணவாளரின் உயர்ந்த குணத்தைக்கண்டு இவருடைய ஆசார்யரான திருவாய்மொழிப் பிள்ளை மிகவும் ஸந்தோஷப்பட்டார். இவரிடம் அதிகமான பிரியத்துடனிருந்து வந்தார். அ[illegible]கண்டு மற்ற சிஷ்யர்கள் தங்களுடைய ஆசார்யனைத் தவறாக எண்ணத் தலைப்பட்டனர். இதையறிந்த பிள்ளை வாக் சாமர்த்தியத்தால் ஜாடையாக மணவாளமாமுனிகளின் யோக்யதையை விவரித்துக் கூறி தம்முடைய நிலைமையையும் தெளிவுபடுத்தினர். இதனால் அவர்கள் தங்களுடைய தப்பபிப்ராயங்களைத் திருத்திக் கொண்டனர்.

இந்த ஸமயம் மணவாளமாமுனிகளுக்கு ஒரு குமாரர் பிறந்தார். எப்பொழுதும் உடையவருடைய ஞாபகமாகவே இருந்த அவர் தம் குழந்தைக்கு ராமானுஜன் என்று பெயரிட்டார். வைதிக தர்மானுஷ்டானத்தில் [illegible]த மிகுந்த மணவாளர் விதிப்படி எல்லா ஸ[illegible]ளையும் தம் புத்திரருக்கு நடத்திவைத்தார்.

சிறிதுகாலம் சென்றதும் திருவாய்மொழிப் பிள்ளையின் உடம்பு வயதின் முதிர்ச்சியால் தளர ஆரம்பித்தது. இனிமேல் தாம் பகவத்ஸந்நிதானம் சென்றுவிடவேண்டிய காலம் சமீபித்துவிட்டதாக எண்ணினர். திருவாய்மொழி ஸேவையிலேயே ஓய்வில்லாமல் ஈடுபட்டிருந்த பிள்ளைக்கு தாம் செய்து வந்ததுபோல் அவ்வளவு ருசிகரமாக தமக்குப் பிறகும் பிரபந்த ஸேவை நடைபெறுமா என்ற விஷயத்தில் கவலை மேற்கொண்டிருந்தது. சிறிது வாட்டமுடன் எழுந்தருளியிருந்தார். அச்சமயம் இதை யுணர்ந்த மணவாளமாமுனிகள் தாம் அப்பெரும் கைங்கர்யத்தில் தீவ்ரமாக ஈடுபடுவதாக வாக்குறுதி கூறினர். சாதாரணமாகச் சொல்லுவது போதா

தென்று பிள்ளையின் திருவடிகளைத்தொட்டு சபதமும்செய்து கொடுத்தார். மணவாளரின் உணர்ச்சியைப் பரீக்ஷிக்க இவ் வண்ணம் செய்த பிள்ளை 'ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களிலே அதிகக் காலத்தைச் சிலவழிக்காமல் ஸ்ரீபாஷ்யத்தை ஒருகால் கேட்டு நமக்கும் எம்பெருமானுருக்கும் பிரியமாகத் திருவாய் மொழி முதலான அருளிச்செயலிலே அடிக்கடி அதிக காலம் பரிசீலனம் பண்ணிக்கொண்டு பெருமாள் மங்களாசாஸனபர ராய் கோயிலிலே (ஸ்ரீரங்கத்திலே) நித்யவாஸம் பண்ணவேண் டும்' என்று அவருக்கு ஆஜ்ஞாபித்தார். அவ்வாசார்ய கட் டளையைச் சிரஸால் வகித்து தாம் அப்படியே செய்வதாகத் தெரிவித்துக்கொண்டார். சில நாட்களுக்கெல்லாம் திருவாய் மொழிப் பிள்ளையின் காலம் முடிந்துவிட்டது. அவருடைய வைதிக க்ரியைகளெல்லாம் நடந்தேறின.

மணவாளர் ஆசார்யரான பிள்ளையின் நியமனப்படி ஆழ் வார் திவ்ய எ[illegible]ளின் பிரசாரத்தையே ஜன்மவ்ரதமாகக் கொண்டு திருநகரி[illegible] அக்கைங்கர்யத்தைச் செய்து வந்தார். பராங்குசரையும், உடையவரையும் விக்ரஹ மூலம் அங்கு பிரதிஷ்டை செய்வித்தார். இவருடைய பிரவசன சக்தியையும், ஸம்பிரதாயஸ்தாபனத்தில் ஊக்கம் கொண்டு செய்துவந்த அழகிய திட்டங்களையும் கண்டு பல சிஷ்யர்கள் இவரை அடைந்தனர். அழகிய வரதர் என்ற ஒருவர் ஸந்நி யாஸம் பெற்று ராமானுஜ ஜீயர் என்ற பெயரை யடைந்தார். கோயிலில் (ஸ்ரீரங்கம்) நித்யவாஸம் செய்ய வேண்டுமென்று ஆசார்யன் ஆஜ்ஞாபித்திருப்பதால் அங்கு செல்ல ஆவல் கொண்டார். ஆழ்வார், உடையவர், பெருமாள் முதலியவர் களுடைய நியமனத்தை அர்ச்சகமுக்மாகப் பெற்ருர். ஸ்ரீ வில்லிபுத்தூர், அழகர் கோயில், முதலிய க்ஷேத்திரங்களின் வழியாக அங்கங்குள்ள ஆண்டாள், பெருமாள் எல்லோரை

யும் ஸேவித்துவிட்டு அதிவிரைவாக ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினர்.

புண்ணிய நதியாகிய காவேரி ஸ்நாநம் செய்து அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டார். அவ்வூரில் இவரைப் போல் ஆழ்வார் திவ்யப்பிரபந்தங்களில் ஈடுபட்டுப் பிரசாரம் செய்துவந்த அண்ணன் என்பவர் க்ருஹத்தில் மணவாளர் தங்கினர். இவருக்குப் பெருமாள்ஸேவை பண்ணிவைக்கும் பொருட்டு அண்ணன் பட்டரிடம் இவரை அழைத்துச் சென்றார். இவருடைய பிரபாவத்தை யறிந்து (திருமாலை தந்த பெருமாள் பட்டர்) பட்டர் திருவாய் மொழியில் ஒரு பாட்டுக்கு அர்த்தம் சொல்லவேண்டு மெனப் பிரார்த்தித்தார். திருவாய் மொழி விஷயத்தில் அளவுகடந்த விசுவாஸமுள்ள மணவாளர் உடனே ஆழ்வார் வைபவத்தைப் பற்றியதான ஒரு பாசுரத்தை விவரித்துரைத்தார். இவருடைய அழகிய வாக்கையும், ஆழ்ந்த கருத்துரைகளை யெடுத்துரைக்கும் நுட்ப புத்தியையும் கண்டு பட்டர் எல்லோரும் ஆச்சரியத்தையும் பேரானந்தத்தையும் அடைந்தனர். பிறகு மிகுந்த சிரத்தையுடன் இவரைப் பெருமாளிடம் அழைத்துச் சென்று அங்கு ஸேவை சௌகரியங்களைச் செய்வித்தனர். ஸ்ரீரங்கநாச்சியாரையும் ஸ்ரீரங்கநாதனையும் ஸேவித்து உள்ளம் கரைந்தார். இவர் பகவத் ஸந்நிதியில் ஈடுபட்டு அந்தரங்க பக்தியுடன் ஸேவித்ததைக் கண்டு எல்லோரும் இவரிடம் மிகுந்த மதிப்பையும் விசுவாசத்தையும் கொண்டனர். பிறகு மணவாள மாமுனிகள் பூர்வாசார்யர்களாகிய, உடையவர், பட்டர், பிள்ளை லோகாசார்யார் முதலிய மஹான்கள் எழுந்தருளியிருந்த திருமாளிகைகளை (வீடுகளை) யெல்லாம் ஒவ்வொன்றாக ஸேவித்து மனம் உருகி நின்றார். புதிய க்ரந்த கோசங்களை யெல்லாம் பார்த்துப் பிரசாரம் செய்துகொண்டு சில

காலம் அங்கு எழுந்தருளியிருந்தார். இவருடைய தேஜஸ்ஸையும், அனுஷ்டானத்தையும், பிரவசன சக்தியையும், பகவத் பக்தியையும் கண்டு அங்கு எழுந்தருளியிருந்த வானமாமலை ஜீயர், அண்ணன், போன்ற பெரியோர்கள் இவரை அவதார புருஷரெனவே மதித்து வந்தனர்.

பெருமாள் நியமனம் பெற்று மணவாளர் திருக்கோவிலூர் மார்க்கமாகத் திருமலை யெனப்படும் திருப்பதிக்குச் சென்றார். மத்தியிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களில் பகவத்பாகவத ஸேவைகளையெல்லாம் செய்துகொண்டு கீழத்திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜர், ஸ்ரீராமன் முதலிய பெருமாளையும், திருமலைமேல் ஸ்ரீநிவாஸனையும் உருக்கத்துடன் ஸேவித்துவிட்டு பெருமாள் கோயில் (காஞ்சீவரம்) எழுந்தருளினர். ஆதி காலத்தில் உடையவர் கைங்கர்யம் செய்து ஈடுபட்ட இடமென விசேஷித்துப் பெருந்தேவித்தாயாரையும், ஸ்ரீதேவாதிராஜனையும், திருக்கச்சிநம்பி, உடையவர், ஆழ்வார்கள் எல்லோரையும் ஸேவித்துவிட்டு ஸ்ரீபெரும்புதூருக்கு எழுந்தருளினர். தம் குல குருவான உடையவர் தோன்றிய புண்ணிய பூமியென அதைக்கண்டு பெரிதும் கரைந்தார். அவரை ஸந்நிதியில் ஸேவித்துவிட்டுத் திரும்பக் காஞ்சீவரத்திற்கு எழுந்தருளினர். கிடாம்பியாச்சான் வம்சத்தில் பிறந்து அப்பொழுது அங்கு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்வித்துக்கொண்டிருந்த கிடாம்பி நாயனரிடம் ஆச்ரயித்தார். ஸ்ரீபாஷ்ய ரஹஸ்யங்களைத் தெரிந்துகொண்டார். பிறகு அவ்வூரில் பகவத் விஷய கோசங்களைச் சேர்த்துக்கொண்டு ஸ்ரீரங்கம் எழுந்தருளினர்.

அங்கேயே இருந்துவர வேண்டுமென பலர் பிரார்த்தித்தனர். தமது ஆசார்யனுடைய கட்டளையும் அவ்வாறே

பிருந்ததால் அவ்வூரிலேயே வஸித்துக்கொண்டு பகவத்விஷய மெனப்படும் ஆழ்வார்களின் பிரபந்தங்களை சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் செய்விப்பதின் மூலமும், மற்ற பொது உபந்யாஸங்கள் மூலமாகவும் பிரசாரம் செய்துவந்தார். பிரதி தினம் பெருமாள் ஸேவிப்பதும், காலக்ஷேபாதிகள் செய்விப் பதுமே இவருடைய காரியமாக இருந்துவந்தது. ஒருசமயம் இவருக்கு ஆசௌச (தீட்டு) ஸமாசாரத்தை எவரோ ஒருவர் வந்துசொல்ல, இவர் சிலதினங்கள் பகவானை ஸேவிக்க முடியாமல் ஏற்பட்டது. இவரைப்போன்ற பக்தர்களுக்கு பகவத் ஸேவை, ஆராதனாதிகள் இல்லாமல் ஒரு க்ஷணம்கூட இருக்க விரும்பமாட்டார்களல்லவா? இப்படிப்பட்ட ஆசௌச காரியங்கள் இனிமேலும் வராமலிருக்க நான்காவதான ஸந்நியாஸ ஆசிரமத்தைப் பெறுவதுதான் தகுந்த உபாயமென நினைத்தார். ஆசௌசம் நீங்கியதும் சடகோபஜீயர் ஸந்நிதிக்கு எழுந்தருளி அவர் மூலமாக காஷாய த்ரிதண்டங்களைப் பெற்று தமது நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொண்டார். சடகோபஜீயர் என்ற புதிய பெயரிடப்பட்டது. ஒருநாள் பெருமாள் ஸேவிக்கும்பொழுது முந்திய பெயரே இருக்கும் படி அர்ச்சகமுகமாய் ஸ்ரீரங்கநாதனுடைய ஆஜ்ஞை பிறந்தது. ஆகையால் அழகிய மணவாள ஜீயர் என்றே பெயர் உண்டாயிற்று. பல்லவராயன் ஸ்ரீராமானுஜகூடம் இவருக்கு ஒதுக்கிவிடப்பட்டது. அதில் இவர் முன்போல் காலக்ஷேபாதிகளைச் செய்வித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பெருமாள் விஷயமான திருவாய்மொழியினுடைய ஈடு முதலிய வ்யாக்யானங்கள், அருளிச்செயல் விஷயம், ஸ்ரீவசன பூஷணாதி ரஹஸ்யங்களின் தாத்பர்யங்கள் எல்லாவற்றையும் ஸாமான்யர்களுக்கும் எளிதில் புரியும்படி இவர் பிரவசனங்களைச் செய்து வந்தார். பிரதிதினமும் ஸ்ரீராமானுஜ

நூற்றந்தாதியையே காயத்ரீப் பிராயமாக உருக்கத்துடன் ஆவர்த்தி செய்வதிலும் தமது விருப்பத்தை உடையவரிடம் விஜ்ஞாபனம் செய்வதிலும் விசேஷமாக இவருடைய ஞாபக மிருந்துவந்தது. தமது ஆராதனத்தில் ஸ்ரீரங்கநாதனையும் எழுந்தருளப் பண்ணிப் பிரதிஷ்டை செய்து நித்யமாகப் பூஜித்து வந்தார்.

அப்பா வென்ற ஒருவர் இவருடைய திருவடிகளில் ஆச்ரயித்தார். அவர் பரமபாகவதர். எவ்விதப் பிரயோஜனமு மின்றி ஸ்ரீரங்கநாதனுக்குத் திருமஞ்ஜன கைங்கர்யத்தைச் செய்து வந்தார். இவருடைய பிரபாவங்களைத் தகப்பனார் மூலம் கேட்டு அப்பாவின் குமாரத்தியும் ஜீயரிடம் மிகுந்த பக்தியைக் கொண்டாள். அவள் கந்தாடை அய்யங்கார் களின் குலத்தின் மணமகளாயிருந்தாள. ஆச்சி என்று அவ ளுடைய பெயர். ஜீயரிடம் ஆச்ரயிக்க வேண்டுமென்று அவ ளுடைய நோக்கம். அவளுடைய பிதாவும் அவ்வண்ணமே நினைத்தார். கந்தாடை வம்சம் உடையவரால் ஆஜ்ஞாபிக்கப் பட்ட 74 ஸிம்மாசனாதிபதிகளின் கோஷ்டியைச் சேர்ந்தது. ஆகையால் வம்சப்பிரபாவத்தை எடுத்துரைத்து மற்றவிடத் தில் ஆச்ரயிப்பது ஆச்சியாருக்குத் தகாது என்று ஜீயர் வற் புறுத்திக் கூறினார். அதினால் அப்பாவுக்கும், அவரது குமா ரத்திக்கும் மனம் மாறவில்லை. பிறகு இவ்வாச்சியின் மனோ வேகத்தின் காரணமாகவும், ஜீயருடைய பிரபாவத்தினாலும் குல முறைகளைப் பொருட்படுத்தாது கந்தாடை அய்யங்கார் களான அண்ணன் முதலியவர்கள் மணவாளமாமுனிகளை ஆச்ரயித்தார்கள். கந்தாடை லக்ஷ்மணாசார்யரின் பௌத்ர ரான எம்பா, கந்தாடை யப்பன், பிரதிவாதி பயங்கரம் அண் ணன், எரும்பியப்பா, தோழப்பர் போன்ற பல பிரமுகர்கள் 'பெரிய ஜீயர்' எனப்படும் மணவாளமாமுனிகளை ஆசார்ய

ராக வரித்தனர். இவ்வாறு சிஷ்ய வர்க்கங்கள் விருத்தி யடைந்தன. அவர்களுக்குக் காலக்ஷேபாதிகளைச் செய்து பகவத் ஸேவையுடன் சிலகாலம் ஜீயர் அங்கு எழுந்தருளி யிருந்தார். பிறகு அழகர், ஆண்டாள் எல்லோரையும் ஸே வித்துவிட்டுத் திருநகரி சென்று ஆழ்வாரை ஸேவித்தார். அங்கு சிலகாலம் எழுந்தருளியிருந்தார். அச்சமயம் அத்தேச அதிபதி யொருவர் இவரை ஆச்ரயித்தார். அவருக்கு சட கோபதாஸ ரென்று பெயரிட்டார். எவருக்குப் பெயர் கொடுத்தாலும் சடகோபதாஸன், ராமானுஜதாஸன், என்றே சொல்லுவதை நினைத்தால் ஆழ்வார், உடையவர் முதலிய இருவர்களின் தியானத்திலேயே இடைவிடாது இவர் ஆழ்ந் திருந்தாரென நன்றாய்த் தெரியவருகிறது. சிலகாலம் அங் கிருந்துவிட்டு ஜீயர் ஆழ்வாரிடம் விடை பெற்றுக்கொண்டு ஸ்ரீரங்கம் எழுந்தருளினர்.

பிள்ளை லோகாசார்யர் செய்த க்ரந்தங்களை யெல்லாம் தெளிவாக விளக்க வேண்டுமென்று மணவாள மாமுனிகள் ஆவல் கொண்டார். முதலில் தத்வ ரஹஸ்யம், ஸ்ரீவசன பூஷணம், நூற்றந்தாதி முதலியவற்றிற்கு மணிப்பிரவாள ரூபமாக (ஸம்ஸ்க்ருதம் தமிழ் கலந்து) வியாக்யானம் செய் தார். பிறகு திருவாய்மொழி ஸம்பந்தமான நூற்றந்தாதி யொன்றை இயற்றினர். தத்வத்ரயம் என்று பிள்ளை லோகா சார்யர் இயற்றிய க்ரந்தத்திற்கும், திருவாய்மொழி ஈட்டிற் கும் பிரமாணத்திரட்டு என்ற ஆதாரவிஷயங்களைச் சேகரித்து ஒரு க்ரந்தத்தைச் செய்தார். ஸம்பிரதாய ஸித்தாந்தங்களைச் சேகரித்துச் சுருக்கமாய் யாவருமறியும்படி 'உபதேச ரத்ன மாலை' என்ற ஒரு தமிழ் நூலையும் செய்தா.,

மிகுந்த சிரத்தையுடன் ஆச்ரயித்த ஆச்சியின் புதல்வ ரான அண்ணாவிடம் ஜீயருக்கு மிகுந்த அன்பு இருந்துவங்

தது. அவருடன் மறுபடி மணவாளமாமுனிகள் திருமலை யாத்ரையாகப் புறப்பட்டார். திருப்பட்குழி, எறும்பி முதலிய விடங்களிலுள்ள பெருமாளையும் ஸேவித்துப் பின் திருப்பதி சென்று திரும்ப காஞ்சீவரம், ஸ்ரீபெரும்புதூர், மதுராந்தகம், சிதம்பரம், திருவாலி திருநகரி, திருக்கண்ணபுரம், நறையூர், திருக்குடந்தை (கும்பகோணம்) முதலிய திவ்ய க்ஷேத்ரங்களில் எழுந்தருளியிருக்கும் பெருமாள், பிராட்டியார், ஆழ்வார் ஆசார்யர்கள் எல்லோரையும் ஸேவித்துவிட்டு ஸ்ரீரங்கம் எழுந்தருளினர்.

தமக்குப் பிறகும் தமது கொள்கைகள் ஸ்திரமாகப் பிரசாரம் செய்யப்பட வேண்டுமென்ற ஆவலுடன் ஜீயர் சிலதிட்டங்களை ஏற்படுத்தினர். அவைகளில் ஒவ்வொரு சிஷ்யருக்கும் தனித்தனியான கைங்கர்யங்களைச் செய்துவர ஆஜ்ஞாபித்தார். பிரதிவாயங்கரம் அண்ணவை ஸ்ரீபாஷ்ய ஆசார்யராகப் பெயரிட்டு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபங்களைச் செய்துவரும்படி நியமித்தார். கந்தாடை யண்ணனை பகவத் ஸம்பந்தாசார்யர் என்று பகவத் விஷயப் பிரசாரத்தில் ஈடுபடச் செய்தார். சுத்த ஸத்வமண்ணன் என்பவரை திருவாய்மொழி ஆசார்யராக விருக்கச் செய்தார். ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் பெருமாள் கைங்கர்யம் ஸரிவர நடத்திவருவதைப் பார்வையிட தமது பிரமுகர்களான சிஷ்யர்களிடம் பொறுப்பை ஒப்பித்தார். அப்பா இயற்றிய 'ஸ்ரீவைஷ்ண தினசர்யை' யைப் பார்வையிட்டு அதை ஆமோதித்தார். ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிலுள்ள கருட மண்டபத்தில் சற்றேறக்குறைய ஒரு வருஷகாலம் திராவிட வேதமாகிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களை வெகு விரிவாக விளக்கி உபந்யஸித்தார். பகவத் விஷய சூக்ஷ்மங்களைப் பலர் சுலபமாகத் தெரிந்து கொள்ள இது ஒரு நல்ல சமயமாக விருந்தது. ஆதாரங்களுடன்

ஸ்வாமி பெரிய ஜீயர், பாசுரங்களின் ரஹஸ்யார்த்தங்களை வெகு சாதாரணமாக எடுத்துரைத்த ரீதியைக் கண்டு எல்லோரும் ஆச்சரியத்தையும் அளவிலா மகிழ்ச்சியையும் அடைந்தனர்.

தமது வயது முதிர்ச்சியைக் கண்டு மறுபடி ஆழ்வார், ஆண்டாள் எல்லோரையும் ஸேவித்துவர நோக்கம் கொண்டார். திரும்ப மத்தியிலுள்ள திவ்ய தேசங்களில் எம்பெருமான்களை ஸேவித்துவிட்டு ஆழ்வார் ஆண்டாள் முதலியோரையும் திருவடி பணிந்து விடை பெற்றுக்கொண்டு ஸ்ரீரங்கம் எழுந்தருளினர். கடைசி காலத்தில் உடையவரைப்போல் தாமும் ஸ்ரீரங்கத்திலேயே இருக்க வேண்டுமென்று அவருடைய பேராவல். அவ்வண்ணம் எல்லா க்ஷேத்திரங்களிலுள்ள பகவத் ஸேவையை முடித்து நியமனம் பெற்று ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி விட்டார்.

இவ்விடம் பிரதிதினமும் பெருமாளையும் உடையவரையும் தவறாது ஸேவிப்பதுமாகவே இருந்து வந்தார். சரீரம் வயோதிகத்தால் தளர்ந்திருந்தது. அதையும் பொருட்படுத்தாது 'ஆசார்ய ஹ்ருதயம்' என்ற க்ரந்தத்திற்கு வியாக்யானம் செய்தார். இவ்வளவு தூரம் ஏன் சிரமப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கந்தாடை யண்ணன் ஸ்வாமியிடம் தெரிவித்தார். அதற்கு 'உமது புத்ர பௌத்ராதிகளுக்காகவே' என்று ஜீயர் வெகு அழகாக பதிலுரைத்தார். ஸம்பிரதாயத்தைப் பாதுகாக்க அவர் எடுத்துக் கொண்டிருந்த பொறுப்பைக் கண்டு எல்லோரும் இவரை அவதார புருஷரெனப் புகழ்ந்தனர். பெருமாளிடமும் தவறாது பிரதிதினமும் இவர் ஈடுபட்டுவந்த போதிலும் 'யதிராஜர்' எனப்படும் உடையவரிடமே இவருடைய மனம் அதிகம் ஆழ்ந்திருந்ததாகத் தெரிந்தது. தமது நற்கதிக்கு உடையவருடைய அனுக்

ரஹமே பலமாக வேண்டியதென்ற கருத்துரையுடன் அவ ரிடமே தமது ஆர்த்திகளை (கவலைகளை)' நாள்தோறும் விஜ் ஞாபனம் செய்துகொண்டு அவருடைய கருணையைப் பிரார்த் தித்து வந்தார். இவரது இவ்வார்த்திகளும் பிரார்த்தனைகளு மே 'ஆர்த்திப் பிரபந்தம்' என்ற நூலாக ஏற்பட்டது. தமது ஸம்ப்ரதாயங்களைப் பாதுகாத்து வர 'அஷ்டதிக் கஜங்கள்' என்ற வானமாமலை ஜீயர், திருவேங்கட ஜீயர், பட்டர்பிரான் ஜீயர், கந்தாடை யண்ணன், எறும்பி யப்பா, அப்பிள்ளை, அப் பிள்ளார், பிரதிவாதிபயங்கரம் அண்ணு முதலியோரை ஆஜ் ஞாபித்தார். மற்ற பலருக்கும் பலபல கைங்கர்யங்களைச் செய்துவர நியமித்தார்.

பிறகு இறைவனருளால் தம் நோக்கங்களெல்லாம் சித்தி யடைந்துவிட்டதாக நினைத்தார். இனிமேல் தாம் இவ்வுலகை விட்டு பகவத் ஸமீபம் சேர்ந்துவிட வேண்டுமென்று நிச்சயித் தார். சிஷ்யர்கள் எல்லோருக்கும் தமது அபிப்ராயத்தை யறிவித்து ஹிதோபதேசங்களைச் செய்தார். ஸ்வாமி தங்களை விட்டுப் பிரிய நோக்கம் கொண்டதை நினைத்து சிஷ்யர்களனை வரும் மிகுந்த கவலையை யடைந்து துக்கித்தனர். அவர் களைத் தேற்றி தமது ஆஜ்ஞையை யனுஸரித்து பகவத் பாக வத கைங்கர்யங்களையும், பிரபந்தப் பிரசாரத்தையும் செய்து வர வேண்டியதுதான் தமக்குப் பிரியமான கார்யமென்றும் அதுவே தமக்குச் சிஷ்யர்கள் செய்யும் சிச்ருஷை யாகும் என்று கூறினர். தமது பிரிவை ஸஹிக்க முடியாதெனப் பெரிதும் கவலை கொண்ட சிஷ்யர்களுக்கு விக்ரஹரூபமாகத் தம்மை ஆராதித்து வரலாமெனவும் அனுமதித்தார். பிறகு சிஷ்யர்களனைவரும் கைகூப்பி வணங்கிக் கொண்டு ப்ரஹ்ம வல்லி, ப்ருகுவல்லி, சூழ்விசும்பணிமுகில், நூற்றந்தாதி முத லியவைகளைப் பாராயணம் செய்தார்கள். மணவாளமாமுனி

களும் தாமும் அவைகளை மனனம்பண்ணினர். திருவாய்மொழிப் பிள்ளை, உடையவர் திருவடிகளை தியானித்துக் கொண்டு 'பிள்ளை திருவடிகளே சரணம்,' 'எம்பெருமானர் திருவடிகளே சரணம்' என்று அனுஸந்தானம் செய்து கொண்டு திருநாட்டுக் கெழுந்தருளினர்.

மணவாள மாமுனிகள் பகவத்பாகவத கைங்கர்யத்தில் அளவிலா சிரத்தையை உடையவர். ஆசார்ய பக்தியே உரு வெடுத்து வந்ததுபோல் அவர் விளங்கினர். ஸாமான்ய ஜனங்கள் முதற்கொண்டு சுலபமாக நல்வழி பெற பிரபந்த ஸேவையும், பகவத்பாகவத கைங்கர்யமும்தான் சிறந்து இக் காலம் உதவக்கூடியதென்பது அவருடைய கருத்து. ஆலயங் களில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் பகவானை ஸேவித்து அவருக்குப் பணி செய்தே நாம் இக்காலம் சுலபமாக நல்ல நிலைமையை அடைய முடியுமென்பது அவருடைய உயர்ந்த நோக்கமாகும். அப்பெருமாளுடைய அடியார்களான பரமபாகவத ஆராதன விஷயத்தில் அவருக்கிருந்த சிரத்தை அளவி லகப்படாதது. உயர்ந்த ஞானனுஷ்டானங்களைப் பெறுவதின் பிரயோஜனம் ஸ்ரீவைஷ்ணவர்களான பெரியோர்களை அன்புடன் ஆதரிப்பது தான் என்று பலதடவைகளில் அவர் கூறியிருக்கிறர்.

பரம ஸாத்விக மூர்த்தியான ஸ்ரீயப்பதியினிடம் பக்தியுள்ளவர்கள் இருக்கவேண்டிய சிறந்த குணங்கள் அவரிடமிருந்து வந்தன. எல்லோரிடத்திலும் அன்பும், ஆதரவு நினைவும் குடிகொண்டிருந்தன. ஒருநாள் கூடப் பகவத் ஸேவையும் ஆராதனமுமில்லாமல் இருக்க அவர் மனம் பொருக்காது. கிருஹஸ்தாசிரமத்தில் இருந்தபொழுது ஆசௌசத்தினல் (தீட்டினல்) பெருமாள் ஸேவையும் பிரபந்த கால

க்ஷேபமும் சிலநாட்கள் தடைப்பட்டனவென்று உடனே ஸ
ந்யாஸ ஆசிரமத்தை அடைந்துவிட்டார். இதை ஆராய்ந்த
அவருடைய உயர்ந்த பகவத்பக்தி தெளிவாகும்.

இப்படிப்பட்ட உயர்ந்த பரமபாகவத சிகாமணியான மணவாளமாமுனிகளை ஆசார்யராக வரித்திருப்பவர்கள் அவர் நடந்த ஸாத்விகமான வழிகளைப் பின்பற்றி நிற்க வேண்டியது அத்யாவசியம். சிஷ்யர்களின் காரியங்களினாலேயே ஆசார்யனுடைய ஞானனுஷ்டானங்கள் குணங்களெல்லாம் பெரும்பாலும் ஊஹிக்கப் படுகின்றன.

ஏதோ சில காரணங்களினால் ஒரே ஸம்பிரதாயஸ்தர்களுக்குள் அபிப்ராய பேதம் ஏற்படுவது ஸஹஜம்தான். ஸாதாரணமாக அது அபிப்ராய பேதமாகத் தோன்றியபோதிலும் உள்ளபடி அடிப்படையாக மாறுபட்டதாக விருக்காது என்பது ஆழ்ந்து ஆலோசித்தால் தெரியவரும். இப்பொழுது நமது ஸம்பிரதாயம் நம்மாழ்வார் முதல் ஆளவந்தார் வரை பிரசாரத்திலிருந்து திரண்டு உடையவர் முகமாக ஒரே சீருடன் வெளிவந்தது. வைதிகமான ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு உடையவர் குலகுருவாக விளங்குகிறார். அவருக்குப் பின் எத்தனை பிரிவுகள் எந்தக்காரணங்களைக் கொண்டு ஏற்பட்டபோதிலும் எவரும உடையவரைக் கூடஸ்தராக ஒப்புக்கொள்ளாமல் விலக்கிவிட வில்லை. சிற சிலருக்குச் சில உபாயங்கள் சிறந்ததெனப்படலாம். அவை களை அவர்கள் பின்பற்றலாம். ஆயினும் நோக்கமும் முடி வும் எல்லோருக்கும் ஒன்றேதான் என்ற விஷயத்தில் எவ் வித ஸந்தேஹமும் இருக்கமுடியாது.

உதாரணமாய்ச் சில விஷயங்களை எடுத்துக்கொள்ே வோம். மணவாள்மாமுனிகள் கொண்ட கொள்கை முன பிள்ளை லோகாசார்யர் முதலியோர் பிரசாரம் செய்துவந்தவை

னுஸரித்தது தான். புதிதல்ல. அதற்குத் தென்னாசார்யர் (தென்கலை) ஸம்பிரதாயம் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் முகமாகப்பிரசாரத்தை யடைந்தது வடகலை (வடமொழியாகிற ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள சாஸ்திரங்களைத் தழுவியது) ஸம்ப்ரதாயம் என்று சாதாரணமாய் வழங்குகிறது. உடையவருடைய குழந்தைகளாயும் சிஷ்யர்களாயுமுள்ள இவ்விரு பிரிவினர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் அபிப்ராய பேதம் தற்சமயம் காணப்படுமாறு அவ்வளவு ஆக்ரஹத்தைப் பெறத் தகுந்ததல்ல. இப்படிப் பட்ட விஷயங்களில் அபிப்ராய பேதத்தினால் விவாதம் ஏற்படவில்லை யென்றும், ஏதோ ஸமான்யமான வேறு மிகச் சிறியதான கார்யத்தில்தான் அவ்வைஷம்யம் வளர்ந்துவிட்டதென்றும் யாவரும் அறிந்ததே.

தத்வ விஷயங்களில் ஏற்பட்டுள்ள ஒரு அபிப்ராய பேதத்தை மட்டும்தான் இங்கு நாம் குறிப்பிட விரும்புகிறோம். இவ்விரு ஸம்பிரதாயஸ்தர்களுக்குள் மஹா லெக்ஷ்மியே முதல் முதல் ஆசார்யன். இந்த ஸ்ரீ முகமாக ஏற்பட்ட வைஷ்ணவ ஸம்பிரதாயத்தைத் தழுவியதற்காகவே இவ்விரு கோஷ்டிகளின் கொள்கை ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய மென்ற பொதுப் பெயரைப் பெற்றிருக்கிறது. இந்த லெக்ஷ்மி முதல் ஆசார்யன் என்பதை இருதிறத்தாரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அவள் நம்மைப்போல் ஜீவ கோடியைச் சேர்ந்தவள் என்று பிள்ளை லோகாசார்யர் மணவாளமாமுனிகள் அனுஸரித்த கொள்கை. அவள் ஜீவ கோஷ்டியில் சேர்ந்தவளல்ல. பகவானை விட்டுப்பிரிக்க முடியாதவள். தயாரூபமாக பகவானுடைய வக்ஷஸ்தலத்தில் (ஹ்ருதயத்தில்) இருப்பவள். எப்படி சூரியனை விட்டு அவனுடைய பிரபையைப் பிரிக்க முடியாதோ, அப்படியே அவ

ரிடம் தயாஸ்வரூபமாக ஒன்றாயிருக்கும் லக்ஷ்மியை அவரை விட்டுப் பிரிக்க முடியாது. பிரிக்கப்பட முடியாத லக்ஷ்மியோடு கூடியே ஸ்ரீமந்நாராயணன் பரப்ரஹ்மமாக விளங்குகிறார் என்று தேசிக ஸம்பிரதாயத்தின் ரீதி. ஆனால் இரு கோஷ்டியினரும் லக்ஷ்மியை ஆசார்யனாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவள் முகமாகத்தான் பகவானுடைய க்ருபை அடையப்படுகிறதென்றும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். தங்கள் தங்கள் கொள்கைகளைப் புதியதென்று சொல்லாமல் அவைகள் உடையவருடைய கருத்துக் கிணங்கியதென்றும் இரு திறத்தாரும் கூறி வருகின்றனர். இவ்வொரு விஷயத்திலிருந்தே இவ்விரு ஸம்பிரதாயஸ்தர்களுக்குள் பிரசாரத்திலிருந்துவரும் அபிப்ராய பேதங்கள் பரஸ்பர விரோதத்தைதை வளர்க்கும்படியான அத்தகைய விரிவானவைகளாவென்பதை ஆலோசித்து ஸ்ரீராமானுஜராகிய ஒரே ஆசார்ய பிதாவின் குழந்தைகளடங்கிய இந்த ஸ்ரீவைஷ்ணவ குடும்பத்தின் ஒற்றுமையையும் பலத்தையும் வளர்க்கும் கைங்கர்யத்தில் எல்லோரும் ஆழ்ந்து ஈடுபடட்டும். அப்படிப்பட்ட உயர்ந்த நாக்கமும் அதன் ஸித்தியும் நமக்கெல்லோருக்கும் கிட்டுமாறு அந்த கூடஸ்தரான எம்பெருமானாரும் அவருடைய பொன்னடிகளென்ற பெயரைப் பெருமையுடன் சாற்றிக்கொண்டு அவ்வடிகளில் இடைவிடாது மனதைச் செலுத்திவந்த அழகிய மணவாள மாமுனிகளும் அனுக்ரஹிக்கட்டும்!!

223183